# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


<u>ஆணை நாள் 01.07.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 8465/B/2024</u>**

திரு.M.ராஜாராம் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 1,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625017. — பொது அதிகார அமைப்பு

**<u>கோரிய தகவல்:</u>** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 21.12.2023 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD).No.7880 of 2018, நாள்.29.08.2023-இன் மீது பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, அனுமதியின்றி கட்டிடம் கட்டியதற்காக மேற்கூறிய வழக்கின் 3வது பிரதிவாதியின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை தகவலாக வழங்க கோரி மொத்தம் 6 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் திருப்திகரமாக இல்லை என்றும், முழுமையானதாக இல்லை என்றும் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 19.06.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.M.ராஜாராம் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திருமதி.R.ராதா, நிர்வாக அலுவலர், மண்டலம் - 1, மதுரை நகராட்சி, மதுரை மாவட்டம் அவர்கள் ஆஜரானார். |

**ஆணை**

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு ந.க.எண்.ம1ஆ1/010644/23 நாள்.26.01.2024, ந.க.எண்.ம1ஆ1/010644/23 நாள்.15.03.2024 ஆகிய கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், பொதுத் தகவல் அலுலரால் வழங்கப்பட்ட தகவல்களில் தனக்கு திருப்தி இல்லை என்றும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், ஆஜரான மேல்முறையீட்டாளர், குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடம் 3.87 ஏக்கரில் தான் வசித்து வரும் தனது தாய்க்கு பொத்தியப்பட்ட சர்வே எண். 118/13PT-இல் பாதாள சாக்கடை இணைப்பு கொடுத்து உதவுமாறும் கேட்டுக்கொண்டு, எழுத்து மூலமான கடிதத்தை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. **பொது தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு 15.03.2024 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவல்களே போதுமானதாக இவ்வாணையம் கருதுகிறது.**
2. **இருப்பினும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை இவ்வாணையம் கருத்தில்கொண்டு, அதனடிப்படையில், இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், மேல்முறையீட்டாளர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடத்தில், நில அளவையர் மூலமாக அளவீடு செய்து அதன் அறிக்கையையும், இதுகுறித்த தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்கி அதன் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு 16.07.2026 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் இவ்வாணையத்தின் முகாம் விசாரணையில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**
3. **மேலும், மேற்படி மேல்முறையீட்டாளர் கோரும் பாதாள சாக்கடை இணைப்பு குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆவணங்களுடன் மனு கொடுத்து நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு மேல்முறையீட்டாளருக்கு இவ்வாணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8465/B/2024</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 1,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625017.

**<u>மேல்முறையீட்டாளர்:</u>**
Thiu.M.Rajaram,
No.25, Sambakulam 4th Street,
Moondrumavadi, K.Pudur,
Madurai – 625007.

Copy to : File
AK/PC